DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.268/2022**

**அ.சா.–10**

| | |
|---|---|
| பெயர் : திரு. ராஜா | கிராமம்: அம்மாபாளையம் |
| த/பெ. : திரு. மாரிமுத்து | தாலூக்கா : சேலம் |
| வயது :40 | தொழில்: VAO |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 44 of 1969, this the 11th day of September, 2025.

(1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. Section 355 BNSS பிரிவு ன் படி 2ம் எதிரி சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்குரைஞர் ஆஜர் )

**அ.சா.10 மனுவில் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு கூடுதல் முதல் விசாரணை:**

இவ்வழக்கு சம்பவ சமயத்தில் நான் அம்மாபேட்டை டவுன் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வந்தேன். எனது முன்னிலையிலும், எனது உதவியாளர் செந்தில்குமார் முன்னிலையிலும், அப்பு(எ)காமராஜ் என்பவரிடமிருந்து காவல்ஆய்வாளர் நகைகளை கைப்பற்றினார். மேற்படி நகைகளை ஒரு பாலிதீன் கவரில் வைத்து மிளகாய் பொடியுடன் மேற்படி எதிரி புதைத்து வைத்திருந்தார். அதனை தான் எங்கள் முன்னிலையில் காவல் ஆய்வாளரிடம் எதிரி ஒப்படைத்தார். அவ்வாறு ஒப்படைத்தபோது நாங்கள் அந்த நகைளை பார்த்தோம். அந்த நகைகளையோ, அந்த நகைகளின் புகைப்படங்களையோ, பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல இயலும். மீன் டாலருடன் கூடிய 2 பவுன் எடையுள்ள செயின்–1, ஓம் டாலருடன் கூடிய அறுந்த நிலையில் இருந்த செயின் –1, P இன்சியல் போட்ட மோதிரம் –1 ஆகியவைதான் காவல் ஆய்வாளரால் எதிரி அப்பு(எ) காமராஜரிடம் இருந்து கைப்பற்றப்பட்டது. மேற்படி நகைகளின் புகைப்படங்கள் தான்

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem

என்னிடம் காட்டப்படுவதாகும். மேற்படி புகைப்படங்கள் – 3 எண்ணிக்கை **அ.த.சா.பொ.5** வரிசையாகும். (மேற்படி புகைப்படங்கள் குறியீடு செய்யப்பட இயலாது என்று எதிரியின் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபணையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது. இந்த ஆட்சேபனை குறித்து வழக்கு முடிவு செய்யப்படும் சமயத்தில் தீர்மானிக்கப்படும்)

**<u>குறுக்குவிசாரணை–(1ம் எதிரி தரப்பில்)</u>:–**

04.08.2021 அன்று நான் பணியில் இருந்தேன் என்பதற்கு ஆவணம் ஏதும் போலிசாரிடம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை அழைத்தபோது அன்றைய தினம் காலை 9.30 மணியிருக்கும், நானும், எனது உதவியாளரும் காலை 9.10 மணிக்கு காவல்நிலையம் சென்றோம். நாங்கள் காவல்நிலையத்திற்கு செல்வதற்கு முன்பாக 1ம் எதிரி ஷாலினியை போலிசார் எங்கெங்கு அழைத்து சென்றார்கள் என்பதும், என்ன விசாரணை செய்தார்கள் என்பதும் எனக்கு தெரியாது. 1ம் எதிரியின் வீடு மெத்தை வீடு என்றால் சரிதான். அது இரண்டடுக்கு மெத்தையாகும். 1ம் எதிரியின் வீட்டிற்கு நான்குபுறமும் யார் குடியிருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. 1ம் எதிரியின் வீட்டில் 1ம் எதிரி மட்டும் தான் வசித்து வந்தார். அந்த வீட்டில் 1ம் எதிரி மட்டும் தான் வசித்து வந்தார் என்ற விவரம் போலிசார் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 1ம் எதிரியின் வீடு எத்தனை அறைகள் கொண்டது என்று எனக்கு நினைவில் இல்லை. 1ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட செல்போன் யார் பெயரில் வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த செல்போனில் எந்த நிறுவனத்தின் சிம்கார்டு பயன்படுத்தப்பட்டது என்பதும், அதன் எண் என்ன என்பதும், அந்த எண் யார் பெயரில் இருந்தது என்பதும் எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலம் காவல் ஆய்வாளரால் விசாரிக்கப்பட்டு அங்கிருந்த காவலர் ஒருவரால் டைப் செய்யப்பட்டது. அதில் நாங்கள் கையொப்பம் செய்தபோது நேரம் சுமார் 10.30 மணியிருக்கும்.

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem

செல்போன் கைப்பற்றுவதற்கு முன்பாக ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. காவல்நிலையத்திலிருந்து செல்போன் கைப்பற்றுவதற்காக சென்ற தூரம் காவல் நிலைய வாசல்படியிலிருந்து சுமார் 50 மீட்டர் இருக்கும். செல்போன் கைப்பற்றப்பட்ட பிறகு நானும், எனது உதவியாளரும் கையொப்பம் செய்தபோது காலை 10.45 மணியிருக்கும். 1ம் எதிரியின் வீடு மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதியில் உள்ளது என்றால் சரிதான். 1ம் எதிரியின் வீடு அமைந்துள்ள விதியில் இருபுறமும் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. 1ம் எதிரியின் வீட்டிற்கு சென்றபோது அந்த வீடு எந்த நிறம் கொண்ட பெயின்ட் அடிக்கப்பட்டிருந்தது என்றால் அது எனக்கு நினைவில் இல்லை. நான் சொல்வதுபோன்று சொன்ன நேரம், சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் 1ம் எதிரி எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றும், சான்று பொருட்களை எடுத்து ஆஜர் செய்யவில்லை என்றும், 1ம் எதிரியிடமிருந்து மேற்படி சான்று பொருட்கள் ஆய்வாளரால் கைப்பற்றப்படவில்லை என்றும், காவல்நிலையத்தில் ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த ஆவணங்களில் போலிசார் கேட்டுகொண்டதற்கு இணங்க நானும், எனது உதவியாளரும் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளோம் என்றும், தற்போது போலிசார் கேட்டுக்கொண்டபடி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்குவிசாரணை(2ம் எதிரி தரப்பில்)</u>:-**

இவ்வழக்கில் சாட்சியாக இருப்பதற்கு காவல் ஆய்வாளர் எங்களுக்கு அழைப்பாணை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் என்னை செல்போனுக்கு தொடர்பு கொண்டு அழைத்தார். போலிசார் விசாரணையில் எனது செல்போன் எண்ணையோ, போலிசாரின் செல்போன் எண்ணையோ நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அலுவலக நேரத்தில் நான் வேறுபணியாக அலுவலகத்திற்கு செல்லும்போது எங்கள் அலுவலக அறிவிப்பு பலகையில் நான்

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem

என்ன பணிக்கு செல்கிறேன் என்பதை எழுதிவிட்டு செல்லவேண்டும் என்றால் சரிதான். எங்களுக்கு Movement register இல்லை. நான் என்னென்ன பணிகள் செய்தேன் என்பதற்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வருவாய் வட்டாட்சியர் மற்றும் உயரதிகாரிகளுக்கு அறிக்கை சமர்பிக்க வேண்டும் என்றால் சரியல்ல. கிராம நிர்வாக நடைமுறை விதிகள் மற்றும் வருவாய் நிலையாணை பற்றி எனக்கு தெரியும். கிராம நிர்வாக நடைமுறை விதிகளின்படி மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நான் எனது பணிகளை பற்றி உயரதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டும் என்றால் சரியல்ல. வருவாய் நிலையாணைகளின்படி நான் வேறு அலுவலக பணியாக வெளியில் செல்லும்போது அலுவலக முத்திரைகளை எடுத்து செல்லவேண்டும் என்றால் சரியல்ல. நான் அலுவல் ரீதியாக கையெழுத்து செய்யும்போது எனது அலுவலக முத்திரை வைக்கப்பட்டால்தான் நான் கையொப்பம் செய்ததாக எடுத்துகொள்ள இயலும் என்றால் சரியல்ல. நான் கையொப்பம் செய்தததாக சொல்லும் கைப்பற்றுதல் மகசரில் எனது அலுவலக முத்திரை வைக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் அலுவலக முத்திரை வைக்காமல் கையொப்பம் மட்டும் செய்துள்ளது வருவாய் நிலையாணைக்கு முரணானது என்றும், எனது கையொப்பம் ஏற்புடையது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. அம்மாபேட்டை காவல்நிலையம் மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதியில் உள்ளது என்றால் சரிதான். எனது முன்னிலையில் வேறு தனி நபர்களை வழக்கில் சாட்சியாக இருக்க சொல்லி காவல் ஆய்வாளர் அழைத்தாரா என்றால் இல்லை. மார்கெட் தெரு மக்கள் நடமாட்டம் அதிகமான பகுதி என்றால் சரிதான். மார்கெட் தெருவில் தனிநபர்களை யாரையும் சாட்சியாக இருக்கசொல்லி என் முன்னிலையில் போலிசார் அழைத்தார்களா என்றால் அது எனக்கு தெரியாது. மிலிட்டரி ரோடு ரயில்வே டிராக்கை ஒட்டி 168/600 என்ற மைல் கல்லை ஒட்டிய இடத்தில் 2ம் எதிரி நகைகளை எடுத்து ஆஜர் செய்தார். அந்த இடத்தில் நாங்கள் எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் சுமார்

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem

அரை மணிநேரம் இருந்தோம். நாங்கள் அந்த இடத்தில் இருந்தபோது பொது மக்கள் அங்கு வந்து கூடினார்களா என்றால் இல்லை. பாலிதீன் பை மற்றும் மிளகாய் பொடி எளிதில் கிடைக்கக்கூடிய பொருள் என்றால் சரிதான். எங்கள் முன்னிலையில் கைப்பற்றிய பொருட்களை பையில் வைத்து காவல் ஆய்வாளர் சீல் வைத்தாரா என்றால் இல்லை. எனது அலுவலகத்தை விட்டு வேறு அலுவல் பணியாக வெளியில் செல்லும் போது எனது உயரதிகாரிகளிடம் அனுமதி பெறவேண்டும் என்றால் சரியல்ல. தகவல் தெரிவித்தால் போதுமானதாகும். இவ்வழக்கு சம்மந்தமாக நான் செல்வதாக நான் உயரதிகாரிகளுக்கு எழுத்து மூலமாக தெரிவித்தேனா என்றால் இல்லை. 2ம் எதிரி எதன் மூலமாக தோண்டி எடுத்தார் என்று நான் போலிசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது விசாரணை வாக்குமூலத்தில் கைப்பற்றப்பட்ட செல்போனின் IMEI நம்பரை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. 2ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளர் விசாரிக்க ஒரு காவலரால் டைப் செய்யப்பட்டது. டைப் செய்த காவலரின் பெயர் எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் நாங்கள் காவல்நிலையத்தில் வைத்து தான் சாட்சி கையொப்பங்கள் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலம் எத்தனை பக்கங்கள் கொண்டது என்று எனக்கு நினைவில் இல்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் 2ம் எதிரி ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பம் செய்தார். எத்தனை பக்கங்கள் என்று எனக்கு நினைவில் இல்லை. நாங்கள் ஒவ்வொரு பக்கத்திலும் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை. கடைசி பக்கத்தில் மட்டும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். பாலிதின் கவர் என்ன நிறம் கொண்டது என்பதை நான் போலிசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். போலிசார் சொன்னதன்பேரில்தான் கைப்பற்ற நகைகளின் எடைகளை நான் சொல்கிறேன். நான் சொல்வதுபோன்று சொன்ன நேரம், சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் 2ம் எதிரி எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும்

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem

கொடுக்கவில்லை என்றும், சான்று பொருட்களை எடுத்து ஆஜர் செய்யவில்லை என்றும், 2ம் எதிரியிடமிருந்து மேற்படி சான்று பொருட்கள் ஆய்வாளரால் கைப்பற்றப்படவில்லை என்றும், காவல்நிலையத்தில் ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த ஆவணங்களில் போலிசார் கேட்டுகொண்டதற்கு இணங்க நானும், எனது உதவியாளரும் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளோம் என்றும், தற்போது போலிசார் கேட்டுக்கொண்டபடி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் எதிரியின் மீது போலிசாரால் பொய்வழக்கு பதியப்பட்டுள்ளது என்றும், அதற்கு நான் கிராம நிர்வாக அதிகாரி என்ற முறையில் உடந்தையாக இருந்துள்ளேன் என்றும், அதனால் தான் கிராம நிர்வாக நடைமுறைகள் மற்றும் வருவாய் நிலையாணையில் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரி கைது செய்யப்பட்டதாக சொல்லப்படும் இடம் டிவிகே ரோடு, நெல்லை லாலா என்ற பகுதி மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதி என்றால் சரிதான். அந்த இடத்தில் எங்கள் முன்னிலையில் போலிசார் தனி நபர்களை சாட்சிகளாக அழைத்தார்களா என்றால் அது எனக்கு தெரியாது. போலிசார் விசாரணை வாக்குமூலத்தில் நகைகளின் அடையாளங்கள் மற்றும் எடைகளை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem